ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு மூன்றாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமானுஜாய நம:
ஶ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஶ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு மூன்றாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரியகோலத் திருவுருக்காண்பன் நான்
பெரியவண்குருகூர் நம்பிக்கா
ளுரியனாய் அடியேன் பெற்ற நன்மையே

அர்த்தம்:
நம்மாழ்வாரை விட்டு மீண்டு வந்தாலும், நித்யசூரிகளுக்குத் தலைவனான எம்பெருமானுடைய கரிய, அழகிய திவ்ய ரூபத்தைக் கண்டு நான் சேவிப்பேன். இப்பேறு, பெருமை மிக்க நம்மாழ்வாரை சரண் அடைந்து அவருக்கு உரியவனாய் ஆனதால் எனக்கு உண்டானது.

வ்யாக்யான சாரம்:
நம்மாழ்வார் உகந்த விஷயம் என்று அவனைப் பற்றி இப்பாட்டில் பாடுகிறார். சென்ற பாசுரத்தில் வேறு தெய்வம் அறியேன் என்று சொல்லியிருந்தாலும், நம்மாழ்வார் பற்றிய விஷயமாகையாலே இவரும் அதைப் பற்றுகிறார். தானே அவ்வழியைப் பற்றாவிடிலும் அதுவே தாம் பற்றிய வழியில் இருப்பதால் அதையும் பற்றுகிறார். வேண்டாத வழியில் இருக்கும் விஷயத்தையா இவர் விட்டார்? ஆசார்யர் வழியில் வந்த விஷயமாகையால் இவர் அதை விட்டிலர். அவர் உகந்த விஷயம் எதுவுமே இவருக்கும் உகக்கும்.

திரிதந்தாகிலும்:
திரிகை என்பது மீண்டு வருகை. நம்மாழ்வாரை விட்டு சென்ற வழியெல்லாம் மீண்டு வருவது.
அவனை அடைந்த பின் திரும்புவது என்று ஒன்று இல்லை ("ந ச புனராவர்ததே"). அதை முதலடியாகக் கொண்டு மேலும் சென்றால் மீண்டு வருவதும் அவனிடமே ஆகும். அத்தகைய பலன், ஆழ்வார் திருவடிகளில் சரண் புகுந்ததால் இவருக்கு ஏற்பட்டது.

தேவபிரானுடை கரியகோலத் திருவுரு:
அப்படி இவர் தம் நிலை இழந்து மீளும் இடமோ நித்யசூரிகள் வசிக்கும் இடமாகும். அவ்விடத்தில் இவர் பார்ப்பது நித்யசூரிகளுடைய தலைவனாகிய எம்பெருமானின் எழில் திருமேனியாகும் ("கோலமே தாமரைக் கண்ணதோர் அஞ்சன நீலமே").

தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன் நான்:
இவர் வேண்டாமென்றிருக்கிற விஷயமானது நித்யசூரிகள் காணும் வடிவழகு. அதை இவர் அடைவோம் என்று இல்லா விட்டாலும், இவர் அடையும் ஆழ்வாருக்கு அதுவே அடைவாகும். அவன் அழகு நெஞ்சில் பொருந்துவதே கடினம் ("ஜ்யோதீம்ஷ்யாதித்யத்வத் ராஜன் குரூன் ப்ரச்சாதயன் ச்ரியா") என்பது மட்டுமன்றி, அதைக் கண்ணால் காண்பதும் ("தருனௌ ரூபசம்பன்னௌ") கடினமாகும். அவ்வடிவழகையும் இவர் ஆழ்வார் அருளினால் கண்டார்.

காண்பன்:
தவ யோகத்தை விட்டவன் இவ்வுலக விஷயத்தை மீண்டும் காண்பது போல், நம்மாழ்வாரை விட்டு வந்தால் இவர் கண்ணுக்கு இலக்காவது பகவத் விஷயமாகும்.

பெரியவண் குருகூர்:
அவன் நம்மாழ்வார் ஒருவருக்கு மட்டுமே மயர்வற மதிநலம் அருளினான். அவரோ எல்லாவுயிர்க்கும் மயர்வற மதிநலம் அருளினார். அத்தகைய நம்மாழ்வாரைத் தந்த ஊர் என்பதால் பெருமையும் வண்மையும் மிக்கதாகும்.
பல ஆசார்யர்கள் திரண்ட ஊர் என்பதுமாகும். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "பெரியவண் குருகூர் சடகோபன்" என்று அருளினார்.

நம்பி:
அத்தகைய ஊருக்கு நிர்வாஹகர் என்ற பூர்த்தியும் உண்டு நம்மாழ்வாருக்கு.

பெரியவண் குருகூர் நம்பி:
ஏதோ ஒன்றைப் பற்றினார், ஏதோ ஒன்றை விட்டார் மதுரகவி ஆழ்வார், என்று இருப்பதா நம்மாழ்வாருடைய பூர்த்தி?

ஆளுரியனாய்:
நம்மாழ்வாருக்கு உரிய அடியன் என்றது, ஆசார்யர் உகந்த விஷயம் ஒன்று, தாம் உகந்த விஷயம் ஒன்று என்றில்லாமல், ஆசார்யர் பற்றியதையே இவரும் பற்றுகிறார் என்பதைக் குறிக்கிறது.

அடியேன்:
நம்மாழ்வாருடைய எளிமையில் தோற்று அவர் அடியார் ஆகிறார்.

அடியேன் பெற்ற நன்மையே:
நம்மாழ்வார் உகந்ததை உகப்பதே கைங்கர்யத்தின் எல்லையாகப் பற்றுகிறார்.

பெற்ற நன்மையே:
நம்மாழ்வார் பற்றிய விஷயத்தை இவர் தீதெனக் கருதார். அவர் உகந்த விஷயம் இவருக்கும் உகப்பாகும். எனவே பெற்ற நன்மை என்கிறார்.

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்